நுவரெலியா மாநகர சபை - 2024
------------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நுவரெலியா மாநகர சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மாநகர சபைகள் சட்டத்தின் (252 அதிகாரம்) 219 ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நுவரெலியா மாநகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும்

எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.
- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வின் விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்.

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட கட்டளைகளுக்கு இணங்க மாநகர சபை செயற்படுகின்றதா எனவும்.

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்.

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இரண்டு நிலையான வைப்புக்களின் மீளாய்வாண்டிற்குரிய மொத்தம் ரூபா 8,213,313 ஆன பெற வேண்டிய வட்டி வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2025 இன் இறுதி கணக்குகளைத் தயாரிக்கும் போது சீராக்குவதாக. | சரியாக கணக்குகளை தயாரிக்க வேண்டும். |
| (ஆ) | முன்னைய ஆண்டிற்காக மீளாய்வாண்டில் கிடைத்திருந்த மொத்தம் ரூபா 9,763,951 ஆன நிலையான வைப்பு வட்டி சரியாக முதலீட்டு கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்த போதும் பெற வேண்டிய முதலீட்டு வட்டி கணக்கிற்கு ரூபா 14,743,133 என ரூபா 4,979,182 தொகை கூடுதலாக செலவு வைக்கப்பட்டிருந்தது. | 2025 இன் இறுதி கணக்குகளைத் தயாரிக்கும் போது சீராக்குவதாக. | சரியாக கணக்குகளை தயாரிக்க வேண்டும். |
| (இ) | முன்னைய ஆண்டில் மற்றும் மீளாவாண்டிலும் வங்கிக்கு நேரடியாக செலவு வைக்கப்பட்டிருந்த மொத்தம் 3,208,898 ஆன சுவிடிஷ் கணக்கில் வட்டி வருமானம் மீளாய்வாண்டின் போது காசேட்டிற்கு வரவு வைக்கப்பட்டிருந்த போதும் திரண்ட நிதியத்திற்கும் ஆண்டின் வருமானத்திற்கும் செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. | 2025 இன் இறுதி கணக்குகளைத் தயாரிக்கும் போது சீராக்குவதாக. | சரியாக கணக்குகளை தயாரிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 264,321 ஆன 02 மறுக்கப்பட்ட காசோலைகள் கடன்பட்டோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2025 இன் இறுதி கணக்குகளைத் தயாரிக்கும் போது சீராக்குவதாக. | சரியாக கணக்குகளை தயாரிக்க வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டிற்குரிய 31 மறுக்கப்பட்ட காசோலைகளுக்கான ரூபா 169,614 இற்கு 10 சதவீதம் வரையான தண்டப்பணம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2025 இன் இறுதி கணக்குகளைத் தயாரிக்கும் போது சீராக்குவதாக. | சரியாக கணக்குகளை தயாரிக்க வேண்டும். |

### 1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் மற்றும் அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் 05 கணக்கு தொடர்பான மீதிகள் அட்டவணைகளில் உள்ள மீதிகளுடன் ஒப்பிடும் போது ரூபா 3,933,871 ஆன இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது. | 2025 இன் இறுதி கணக்குகளைத் தயாரிக்கும் போது சீராக்குவதாக | கணக்கு மீதிகளுடன் அட்டவணைகளில் உள்ள மீதிகளுடன் ஒப்பீடு செய்தல் வேண்டும். |

### 1.7 இணங்கமண்மைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| **(அ)** | **சட்டங்கள்**<br>மாநகர சபைச் சட்டம் (அதிகாரம் 252) பிரிவு | | | |
| | 247 (அ) முதல் (இ) பிரிவுகள் | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு 125 வியாபார நிறுவனங்களுக்கு மொத்தம் ரூபா 851,200 ஆன வியாபார அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டு இருக்கவில்லை. | நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியில் வியாபார அனுமதி பத்திரங்கள் வழங்கப்பட வேண்டும். |
| **(ஆ)** | **இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்** | | | |
| i. | நி.பி 571(3) | 2009 – 2022 காலப்பகுதிக்கான ரூபா 18,733,995 கூட்டுத் தொகையான காலாவதியான 525 வைப்புக்கள் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதாக. | காலாவதியான வைப்புக்கள் தீர்வு செய்யப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| ii. | 2015 யூலை 14 ஆம் திகதிய 03/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் திருத்தப்பட்ட நி.பி. (2) 371 (ஆ) மற்றும் 05 ஆம் பிரிவு | கட்டுநிதி பெற்றுக்கொண்டு செயற்பாடு முடிவடைந்து 10 நாட்களுக்குள் அல்லது முடிவடைந்த உடனே மீண்டும் தீர்வு செய்யப்பட வேண்டிய போதிலும் 05 ஆண்டு முதல் 08 ஆண்டு கால வீச்சில் 06 உத்தியோகத்தர்கள் பெற்றுக் கொண்டிருந்த முற்பணத்தின் மொத்தமான ரூபா 1,239,500 தொகை தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஆரம்ப புலனாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அந்த அறிக்கை நி. பி 104(3) பரிசோதனைக்காக உள்ளூராட்சி மன்ற ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக. | புலனாய்வு நடவடிக்கைகள் விரைவில் பூர்த்தி செய்யப்பட்டு முற்பணங்களை தேர்வு செய்ய வேண்டும். |
| (இ) | **ஏனைய சுற்றறிக்கைகள்** | | | |
| | 2021 திசெம்பர் 24 ஆம் திகதிய DMA/AMC/02/ 2021/02 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தி | மாநகர சபையின் உள்ளக கணக்காய் பிரிவினால் 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்காக உள்ளக கணக்கய்வுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை. | விடயம் தொடர்பாக ஆராய்ந்து பார்த்து சரி செய்வதாக. | உள்ளக கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 139,945,011 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய மீண்டெழும் வருமானம் ரூபா 231,769,227 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்திற்கான தயாரிக்கப்பட்டிருந்த 03 வங்கி கணக்குகளுக்குரிய வங்கி இணக்க கூற்றில் குறிப்பிடப்பட்ட மொத்தம் ரூபா 5,234,580 தொகை இனங்காணப்படாத கொடுப்பனவு, இனங்காணப்படாத பெறுவனவுகள் மற்றும் தீர்வையாகாத 29 காசோலைகள் இனங் காணப்பட்டு தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை . | தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | இனங் காணப்படாத மீதிகள் இனங்ண்டு சரி செய்யப்பட வேண்டும் |

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

ஆணையாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2024 | | | | 2023 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | டிசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | டிசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 141,090,200 | 144,303,199 | 128,387,128 | 147,190,813 | 140,549,100 | 122,819,119 | 110,778,126 | 137,974,418 |
| (ii) | வாடகை | 94,176,900 | 59,968,388 | 54,088,234 | 71,091,703 | 111,932,700 | 63,991,762 | 53,240,344 | 70,378,359 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 23,901,500 | 23,733,248 | 14,698,788 | 41,532,447 | 22,252,000 | 26,908,286 | 25,343,036 | 34,341,807 |
| (iv) | ஏனைய வருமானம் | 272,454,048 | 492,990,679 | 498,485,834 | 116,873,476 | 439,352,100 | 105,425,835 | 38,853,911 | 108,658,328 |
| | | 531,622,648 | 720,995,514 | 695,659,984 | 376,688,439 | 714,085,900 | 319,145,002 | 228,215,417 | 351,352,912 |

### 2.3.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரியும் வரியும்** | | |
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் ரூபா 87,438,688 ஆன வீதவரி நிலுவையொன்று காணப்பட்டது. அதில் வீதவரி அலகொன்றின் நிலுவை ரூபா 100,000 இனை மிகைத்த 81 அலகுகளிலிருந்து நிலுவை ரூபா 18,653,230 தொகையும் அலகொன்றின் நிலுவை ரூபா 50,000 இற்கும் ரூபா 100,000 இற்கும் இடைப்பட்ட அலகுகளிலிருந்து நிலுவை ரூபா 10,999,610 தொகையும் நிலுவை 160 வீதவரி மீதியொன்று மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 247 (அ) (இ) ஏற்பாடுகள் பின்பற்றப்பட்டு அறவிடப்பட்டி ருக்கவில்லை. | 2025 ஆம் ஆண்டுக்காக ஆண்டில் ஆதனங்களை தடை செய்வதற்கும் நிலுவைகளை அறவிடுவதற்கு வேலை திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளதாக. | நிலுவை வருமானம் விரைவில் அறவிடப்பட வேண்டும். |
| **(ஆ) வாடகை** | | |
| i. மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு 433 கடைகளிலிருந்து ரூபா 49,254,797 கூட்டுத்தொகையான வீதவரி நிலுவையொன்று காணப்பட்டது. அதில் கடையொன்றிலிருந்து வாடகை நிலுவை் ரூபா 100,000 இனை மிகைத்த 107 கடைகளிலிருந்து நிலுவை ரூபா 43,169,691 தொகையும் கடையொன்றின் நிலுவை ரூபா 50,000 இற்கும் ரூபா 100,000 இற்கும் இடைப்பட்ட 32 கடைகளிலிருந்து நிலுவை ரூபா 2,238,136 ஆன நிலுவை மீதியொன்று காணப்பட்டது. | கடைகளை சீல் இடுவதற்கும் நிலுவை அறவீடு அறவீடு இடம்பெற்று வருவதுடன் தவறான பட்டியலிடலை பதிவழிப்பதற்காக 20 நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளதாக. | நிலுவை வருமானம் விரைவில் அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| ii. | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு கிரகெரி வாவியின் 41 கடைகளில் இருந்து அறவிடப்பட வேண்டிய வாடகை மொத்தம் ரூபா 3,772,934 ஆன நிலுவை ஒன்று காணப்பட்டது அதில் கடையொன்றின் நிலுவை ரூபா 100,000 இனை மிகைத்த வைத்த 10 கடைகளில் இருந்து மொத்தம் ரூபா 2,918,596 ஆன நிலுவை என்றும் காணப்பட்டது. | கடைகளுக்கு சீல் வைத்தல் மற்றும் நிலுவையை அறவிடுவதாகவும் ரூபா 1,718,365 தொகையை பதிவப்பதற்காக கௌரவ ஆளுநர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள தாகவும். | நிலுவை வருமானம் விரைவில் அறுவிடப்பட வேண்டும். |
| **(இ)** | **அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்** | | |
| | மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் திகதியில் காணப்பட்ட ரூபா 861,800 ஆன வியாபார அனுமதிப் பத்திரக் கட்டண வருமானத்திலிருந்து ரூபா 757,000 ஆன 87 சதவீதமான மற்றும் ஆண்டின் பட்டியலிடப்பட்ட வருமானத்தில் ரூபா 680,000 தொகை மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 247 (அ) (இ) ஏற்பாடுகள் பின்பற்றப்பட்டு கட்டணங்கள் அறவிடப்பட்டு இருக்கவில்லை. | மூடப்பட்டிருந்த வியாபாரங்களுக்காக பட்டிலிடப்பட்ட பெறுமதி அகற்றுவதற்கும் கொடுப்பனவு செய்யப்படாத இடங்களுக்காக வழக்குத் தொடர்வதற்கும் நடவடிக்கை எடுப்படுவதாகவும். | குறித்த ஆண்டில் அனுமதிப்பத்திர கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும். |
| **(ஈ)** | **நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்** | | |
| | மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 411,664 மற்றும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 78,180,828 ஆக இருந்தது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாக. | நிலுவை வருமானம் விரைவில் அறுவிடப்பட வேண்டும். |
| **(உ)** | **ஏனைய வருமானம்** | | |
| i. | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 5598 நீர் பாவனையாளர்களிடமிருந்து ரூபா 37,784,304 கூட்டுத்தொகையான நீர்க் கட்டண நிலுவையொன்று காணப்பட்டது. அதில் ஒரு பாவனையாளரிடமிருந்து நிலுவை் ரூபா 100,000 இனை மிகைத்த 48 பாவனையாளர்களிடமிருந்து நிலுவை ரூபா 11,781,696 ஆன நிலுவை மீதியொன்று காணப்பட்டது. | மூன்று மாதங்களுக்கும் மேற்பட்ட நிலுவை காணப்படும் பாவனை யாளர்களுக்காக சிவப்பு பட்டியல் அனுப்புதல் மற்றும் துண்டித்தல் செயற்பாட்டின் மூலம் அறவிடப்படுவதாக. | நிலுவை வருமானம் விரைவில் அறுவிடப்பட வேண்டும். |
| ii. | மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 4,638,033 ஆன நிலுவை அறிவித்தல் பதாதை வருமானத்தில் எவ்வித தொகையும் அறவிடப்படாது இருந்ததுடன் ஆண்டில் பட்டியலிடப்பட்ட வருமானத்தில் ரூபா 2,246,143 தொகை என்பன மாநகர சபை கட்டளை சட்டத்தின் 254 (அ) (1) பிரகாரம் நடவடிக்கை எடுத்து அறவிடப்பட்டிருக்க வில்லை. | நினைவூட்டல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா கவும் கட்டணங்களைச் செலுத்தாத பதாதைகளை அகற்றுவதற்கு சட்ட நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவை வருமானம் விரைவில் அறுவிடப்பட வேண்டும். |
| iii. | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு கிரகரி வாவியில் 23 படகுகளிலிருந்து மொத்தம் ரூபா 6,607,712 ஆன படகு கூலி வருமான நிலவை மீதி ஒன்று காணப்பட்டதுடன் அதில் ஒரு படகுகாரரிடமிருந்து நிலுவை ரூபா 500,000 இனை | நிலுவை படகு கட்டணங்களை வாராந்தம் அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் | நிலுவை வருமானம் விரைவில் அறுவிடப்பட வேண்டும. |

| | |
|---|---|
| விஞ்சிய 04 படகு உரிமையாளர்களிடமிருந்து மொத்தம் ரூபா 5,218,799 தொகையும் ஒரு படகு உரிமையாளரிடமிருந்து நிலுவை ரூபா 100,000 இற்கும் ரூபா 500,000 இடைப்பட்ட 05 படகு உரிமையாளர்களிடமிருந்து மொத்தம் ரூபா 1,033,882 ஆன நிலுவை மீதியொன்றாக இருந்தது. | தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுதல்

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுது போக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 நவம்பர் 19 ஆம் திகதி நடைபெற்ற நிதி மற்றும் சட்டம் தொடர்பான நிலையான செயற்குழு அறிக்கையின் பிரகாரம் வர்த்தக நோக்கில் நடத்திச் செல்லப்படுகின்ற கிரகெரி வாவி படகுச் சேவையை முறைப்படுத்துதல் நிர்வகித்தல் மற்றும் கட்டண அறவீடு தொடர்பான உறுப்புரையொன்று வரைவாக்கப்பட்டு 2022 நவம்பர் 03 ஆந் திகதி உள்ளூராட்சி மன்ற ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டு இருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையிலும் நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. | இந்த உப உறுப்புரைபுகளை அங்கீகித்து தருமாறு உள்ளூாட்சி மன்ற ஆணையாளருக்கு அறிவித்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தாமதம் ஒன்று காணப்படுவதாகவும். | பின் தொடர் நடவடிக்கை எடுத்து உரிய உறுப்புரைகள் பிறப்பிக்க வேண்டும். |
| (ஆ) | மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 247 (அ) (இ) இன் பிரகாரம் வருமான உழைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற தொழிலொன்றாக செயற்படுத்தப்படும் கோவேறு கழுதை சவாரியை ஒழுங்குபடுத்துவதற்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட்டு சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உப விதியொன்று பிறப்பிக்கப்பட்டு எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் என்பதாக. | கோவேறு கழுதை சவாரியை ஒழுங்குபடுத்து வதற்காக உப விதியொன்று பிறப்பிக்கப்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவச் செயற்றிறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | விக்டோரியா பூங்காவில் உள்ள ஒரு உணவகத்தைப் பராமரிப்பதற்காக 2016 ஆம் ஆண்டில் விவசாயத் திணைக்களத்திற்காக ரூபா. 430,000 ஆண்டுக் குத்தகை செலுத்தப்பட்ட போதிலும், 2016 முதல் 2022 வரையிலான காலத்திற்கு நிலுவையில் உள்ள ரூபா 2,257,500 நில வாடகை வசூலிக்கப்படவில்லை. | இந்த உணவகத்தை மதிப்பீடு செய்து மாநகர சபைக்கு மாற்றுவதற்கு விவசாயத் திணைக்களம் ஒப்புக் கொண்டுள்ளதுடன், மேலும் அதற்காகச் செலுத்த வேண்டிய தொகையில் கிடைக்க வேண்டிய வாடகை ஈடு செய்யப்படும். | வாடகை வருமானம் வசூலிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | விக்டோரியா பூங்காவில் அமைந்துள்ள சபைக்குச் சொந்தமான உணவகம் விலை மனுக் கோரல் மூலம் குத்தகைக்கு விடப்பட்டிருந்தாலும், ஒப்பந்தத்தை முறையாகத் தயாரிக்கத் தவறியதாலும், குத்தகைதாரர் ஆரம்ப நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்ளத் தவறியதாலும், மாநகர சபை 2011 - 2021 காலப்பகுதிக்கான குத்தகை ரூபா 2,360,697 ஆன தொகையையும் 2023 ஜனவரி 01 தொடக்கம் 2024 ஜூலை 31 ஆம் திகதி வரை கிடைக்க வேண்டிய மொத்த கேள்வி வருமானம் ரூபா 4,083,800 ஆன தொகையையும் மாநகர சபை இழந்துள்ளது. மேலும், 2023 ஜனவரி 01 தொடக்கம் 2023 திசெம்பர் 31 வரையிலான காலகட்டத்திற்கான கேள்வி வாடகையைப் பெற்ற தரப்பினர் இரண்டு மாதங்கள் மாத்திரமே வியாபாரம் செய்து 2023 மே இல் வர்த்தக நடவடிக்கைகளில் இருந்து விலகியிருந்தாலும், வருடாந்த கேள்வித் தொகையில் அதுவரை செலுத்தப்பட்ட ரூபா 1,323,000 ஆன தவணைத் தொகையில் சபைக்கு ஏற்பட்ட இழப்புகளை மீட்டெடுக்கவும், மீதமுள்ள தொகையைத் தீர்க்கவும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | 2011 முதல் 2021 வரையிலும், 2023 ஆகஸ்ட் 1 முதல் 2024 ஜூலை 31 வரையிலும் நிலுவையில் உள்ள கேள்வித் தவணைகளை வசூலிக்க வழக்குகள் தொடரப்பட்டுள்ளதுடன், மேலதிகமாக செலுத்தப்பட்ட தொகையை கேள்விதாரருக்கு விடுவிக்க தேவையான மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | வரி நிலுவைகள் மற்றும் அதிகப்படியான செலுத்துதல்கள் தீர்க்கப்பட வேண்டும். |
| (இ) | மாநகர சபை அதிகார எல்லைக்குட்பட்ட ஹேடன்ஹில் மாவத்தையில் அமைந்துள்ள சுற்றுலா சபையில் பதிவு செய்யப்பட்ட 29 அறைகளைக் கொண்ட ஒரு ஹோட்டல் சரியாக மதிப்பீடு செய்யப்படவில்லை, மேலும் 2019 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி திகதி வரை மதிப்பீட்டு வரி அறவிடப்படாமல் ஆண்டுதோறும் ரூபா 3,315 தொகை மாத்திரமே அறவிடப்பட்டது. இந்த விடயத்தில் மீள் விசாணையொன்று வெளியிட்ட பின்னர், சொத்து தற்காலிகமாக மதிப்பிடப்பட்டு 2019 முதல் 2020 வரை வசூலிக்கப்பட வேண்டிய மதிப்பீட்டு வரியின் அளவு, நிலுவையில் உள்ள வருடாந்த வரியுடன் சேர்த்து, ரூ.பா 786,830 என அடையாளம் காணப்பட்டது, ஆனால் அத் தொகை அறவிடப்படவில்லை. | ஆதனங்கள் தற்காலிக மதிப்பீட்டின் அடிப்படையில் சொத்து வரி விதிக்க எதிர்காலத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | ஆதனங்களின் புதிய தற்கலிக மதிப்பீட்டின் பிரகாரம் வீதவரி அறவிடப்பட வேண்டும். |
| (ஈ) | மாநகர சபை அதிகார பிரதேசத்தில் கிளெனபோல் பிரதேத்தில் அமைந்துள்ள 44625 சதரு ரு அடியுடன் கூடிய பாரிய வியாபார ஆதனமொன்றுக்காக 2019 ஆம் ஆண்டு முதல் சரியாக ஆண்டுப் பெறுமதி மதிப்பீடு செய்யப்படாமல் வருடாநதம் ரூபா 4,000 மாத்திரம் வீதவரி அறவிடப்பட்டிருந்தமையால் அதிகளவிலான வருமானமொன்று சபைக்கு கிடைக்காமல் போயிருந்தது. | உரிமையாளர்களுக்காக இந்த இடத்தில் காணப்படும் பிரதான ஆதனத்துடன் இந்த ஆதனம் ஒன்றிணைக்கப்பட்டு வீதவரி அறவிடப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் 2019 முதல் நிலுவை வீத வரியை கணக்கிட்டு அறவிட்டுக் கொள்வதாக. | ஆதனங்கள் சரியாக மதிப்பீடு செய்யப்பட்டு வீத வரி அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | மாநகர சபை அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள 32 அறைகளுடன் கூடிய 16000 சதுர அடி அளவிலான ஹொட்டெலுக்காக இணக்க சான்றிதழ் வழங்கப்பட்டிருந்த போதும் சரியாக மதிப்பீடு செய்து வீதவரி அறவிடப்பட்டிருக்கவில்லை. | குறித்த கட்டிடத்திற்காக இணக்கச் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்த திகதியில் இருந்து புதிய மதிப்பீடு செயற்படுத்தப்பட்டு கால எல்லைக்காக அறவிடப்பட வேண்டிய நிலுவை வீத வரி அறவிடப்படுவதாக. | ஆதனங்கள் சரியாக மதிப்பீடு செய்யப்பட்டு வீத வரி அறவிடப்பட வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய பொது வசதிகள் கடன் கொடுத்தோர் மீதி ரூபா 8,890,404 ஆக இருந்தது அதில் 5 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட ரூபா 346,585 தொகையும் ஆண்டு 2 - 4 ஆண்டுகளுக்கு இடைப்பட்டிருந்த ரூபா 1,324,905 ஆன தொகையும் தீர்வு செய்யப்படாத மீதியாக காணப்பட்டது. | குறித்த நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்ட போதும் பழைய கொடுப்பனவிற்காக வேண்டுகோள் விடுக்கப்பட்டவில்லை என்பதாக. | கடன் கொடுத்தோர் மீதிகள் தேர்வு செய்யப்பட வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு மொத்தம் ரூபா 86,576,919 ஆன கடன்பட்டோர் மீதியாக இருந்தது அதில் 05 ஆண்டு காலப்பகுதியை மிகைத்திருந்த மொத்தம் ரூபா 25,541,259 தொகையும் 3 ஆண்டுகளுக்கும் 5 இற்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் காணப்படுகின்ற மொத்தம் ரூபா 23,202,801 தொகையும் 1 இற்கும் 03 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலல்பகுதியில் காணப்படுகின்ற மொத்தம் 11,701,993 தொகையான மீதியும் இருந்தது. | விடயங்களை பரீட்சித்து பெறுமதியை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | பெற வேண்டிய தொகை அறவிடப்பட வேண்டும். |

## 3.3 விளைவற்ற அல்லது குறை பயன்பாடுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய் வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு மொத்தம் ரூபா 2,157,500 ஆன 05 வாகனங்கள் 3 இற்கும் 15 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாகவும் பெறுமதி இனங்காண பல முடியாத 07 வாகனங்கள் 2 இற்கும் 17 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் இருந்தும் பயன்பாட்டுக்கு எடுக்கப்படாமல் விளைவற்றும் குறைபயன்பாட்டுடன் காணப்பட்டன | குறித்த சொத்துக்களை கைதவிர்ப்பதற்காக மதிப்பீட்டை பெற்றுக் கொள்வதற்கு மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக. | திருத்தம் செய்து பயன்படுத்த அல்லது கைதவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **கையேற்கப்படாத சொத்துக்கள்** | | |
| சபை பயன்படுத்தும் கட்டிடங்களுடன் கூடிய 11 காணித் துண்டுகளின் உரித்து கையேற்கப்பட்டிருக்கவில்லை. | பிரதேச செயலாளர் மற்றும் காணி ஆணையாளரிடம் இருந்து கையேற்பதற்காக ஆலோசனைகள் கோரப்பட்டுள்ளதாக. | சபைக்கு சொந்தமான ஆதனங்களின் உரித்து கையேறகப்பட வேண்டும். |

## 3.5 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணியினருடன் ஒப்பிடும் போது 97 வெற்றிடங்கள் காணப்பட்டன. அதில் பொறியியலாளர், வருமான பரிசோதகர், பொது சுகாதார பரிசோதகர் உத்தியோகத்தர்கள் மற்றும் முகாமைத்துவ சேவைகள் என மொத்தம் 14 வெற்றிடங்கள் காணப்பட்டமை நிறுவகத்தின் நடவடிக்கைகளை முறையாக நிறைவேற்றுவதற்கு தடையொன்றாக காணப்பட்டது.பதவிகளில். | இதுவரை 97 வெற்றிடங்கள் வரை குறைந்துள்ளதாகவும் ஏனைய வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும். | அத்தியவசிய வெற்றிடங்கள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு மரணித்த, ஓய்வுபெற்ற இடமாற்றம் பெற்றுச் சென்ற, சேவையிலிருந்து வெளியேற்றப்பட்ட மற்றும் இடமாற்றம் பெற்றுச் சென்ற 75 உத்தியோகத்தர் களிடமிருந்து ரூபா 4,324,533 கூட்டுத்தொகையான ஊழியர் கடன்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | இடமாற்றம் பெற்று சென்ற உத்தியோகத்தர் களிடமிருந்து ஊழியர்களின் கடன் நாட்குறிப்பு மூலமும் மாதாந்தம் கழிக்கப்படுதல் மூலம் மூலமும் அறவிடப்படுவதாக. | நிலுவை ஊழியர் கடன் விரைவில் அறவிடப்பட வேண்டும். |

## 4. கணக்களிதன்மையும் நல்லாளுகையும்
### உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாநகர சபையின் உள்ள கணக்காய்வு பிரிவில் பிரதான உள்ளக கணக்காய்வாளர் மற்றும் 02 உதவியாளர் உத்தியோகத்தர்களின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதும் முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டில் 04 உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்ததால் செயலாற்றல் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | 30 இற்கும் அண்மித்த அளவில் நி.பி 104 (3) பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதால் கணக்காய்வு நடவடிக்கைகள் தாமதம் ஆனதுடன் எதிர்காலத்தில் கணக்காய்வு நடவடிக்கைகளை சரியாக மேற்கொள்வதாக. | உள்ளக கட்டுப் பாட்டை பலப்படுத்து வதற்காக உள்ளக கணக்காய்வு முறையாக செயற் படுத்தப்பட வேண்டும். |